Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 1**

| Name | திரு.ராமகிருஷ்ணன் | Occupation | பெட்ரோல்பல்க் மேலாளர் |
|---|---|---|---|
| Father's name | கோட்டைமலை | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of March 2026.

09.03.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்ரோல் பல்க்கில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 17.04.2025 அன்று ஏகேஆர் பேருந்து நிறுவனத்திற்கு சொந்தமான TN 65 Q 1762 என்ற பதிவெண் கொண்ட பேருந்து ஜோதி பெட்ரோல் பல்க்கிற்கு காலை 10.00 மணியளவில் வந்தது. அந்த பேருந்து எங்கள் பல்க்கின் பராமரிப்பில் இருந்து வந்தது. பின்னர் 23.04.2025 அன்று மாலை 06.00 மணியளவில் பேருந்து எலக்ட்ரீசியன் பராமரிப்பு வேலைக்காக பேருந்தை பார்த்தபோது பேருந்தில் சாவிபோட்டும் ஆன் ஆகவில்லை, பேருந்தில் லைட் எதுவும் எரியவில்லை. பேருந்தின் பேட்டரியை பார்த்தபோது 150 ஆம்ஸ் எக்ஸைட் பேட்டரிகள் அதன் மதிப்பு ரூ.34000/- காணாமல்போனது தெரியவந்தது. எலக்ட்ரீசியன் என்னிடம் வந்து சொன்னார். நான் சிசிடிவியில் பார்த்தபோது 2 நபர்கள் பேட்டரியை இருசக்கர வாகனத்தில் திருடி சென்றது தெரியவந்தது. ஆஜர் எதிரிகள் தான் மேற்படி பேட்டரியை திருடி சென்றவர்கள். நான் இது சம்மந்தமாக எனது முதலாளிக்கு தகவல் சொன்னேன். அவரும் வந்து சிசிடிவி பதிவை பார்த்துவிட்டு அக்கம்பக்கத்தில் விசாரித்து பார்த்தோம். ஒரு வாரம் கழித்தும் பேட்டரி கிடைக்கவில்லை என்பதால் இது சம்மந்தமாக

போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள பேட்டரிகள் தான் சம்பவத்தன்று திருடப்பட்டவையாகும். **பேட்டரிகளின் புகைப்படங்கள் சாபொ.1 ஆகவும் மற்றும் சாபொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அதனை 2ம் எதிரி தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது–</u>**

நான் BCA வரை படித்துள்ளேன். நான் மேற்படி பெட்ரோல் பல்க்கில் வேலை செய்வதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுக்கும்வரை ஆஜர் எதிரிகளின் பெயர் விலாசம் போன்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் ஆஜர் எதிரிகளை பிடித்து வந்து காவல்நிலையத்தில் வைத்து இவர்கள் தான் மேற்படி பேட்டரிகளை திருடியதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். எனது வீடானது திருவில்லிபுத்தூரிலுள்ள கம்மாபட்டியிலுள்ளது. நான் தினமும் வேலை செய்யும் மேற்படி பல்க்கிற்கு திருவில்லிபுத்தூர் பல்க்கிற்கு திருவில்லிபுத்தூர் டவுண் வழியாக சென்று வருவேன். திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்திலிருந்து எங்களது பல்க் சுமார் 4, 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து புகார் மனு கொடுத்தேன். நான் கூறவது தவறு என்றாலும் சம்பவம் நடந்த 13 நாட்கள் கழித்து தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கண்காணிப்பு கேமரா காட்சிகளை 23.04.2025 அன்று பார்த்தேன் புகார் மனுவை 30.04.2025 அன்று கொடுத்தேன். எனது சம்பள பில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனாஎ ன்றால் எனக்கு சம்பளத்தை பணமாக நேரடியாக கையில் தான் தருவார்கள். அதனால் அவ்வாறு சம்பள பில் எதுவும் இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும் மேற்படி பல்க்கில் நான் வேலை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ஏகேஆர் டிரான்ஸ்போர்ட் அலுவலகம் ராஜபாளையத்தில் உள்ளது. மேற்படி டிரான்ஸ்போர்ட்டில் எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களது பல்க்கில் ஏகேஆர் நிறுவத்தின் பேருந்தை வழக்கமாக நிறுத்துவார்கள் என்பது தொடர்பான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எங்களது பெட்ரோல் பல்க்கில் கடந்த 2022 ம் ஆண்டு கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டது. எங்களிடம்

கணினி போன்றவையும் உள்ளது. கணினி பழுது ஏற்பட்டால் சரி செய்வதற்கு எங்கள் பல்க்கில் ஆட்கள் உள்ளார்களா என்றால் இல்லை. இதுவரை பழுது எதுவும் ஏற்பட்டதில்லை. மேற்படி எக்ஸைட் பேட்டரிகளை சுமார் 10 வாகனங்களிலிருந்து எடுத்து அதில் ஒரு வாகனத்தின் பேட்டரியை என்னை அடையாளம் காட்ட சொன்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது. மேற்படி பேட்டரிகளை நான் காவல்நிலையத்தில் வைத்துதான் பார்த்தேன் என்றால் சரிதான். காவலர்கள் தான் மேற்படி பேட்டரிகளை எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான். ஏகேஆர் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் உரிமையாளரிடம் மேற்படி பேட்டரி காணாமல் போனது பற்றி உடனே தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் உரிமையாளல் உடனடியாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. கண்காணிப்பு கேமரா காட்சிகள் தெளிவாக இருந்ததா என்றால் தெளிவாகத்தான் இருந்தது. மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளில் இருந்த நபர்கள் கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எக்ஸைட் பேட்டரிகளுக்கும்ஆஜர்எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தவித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. கண்காணிப்பு கேமரா காட்சிகளிலுள்ள நபர்கள் ஆஜர் எதிரிகளே இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் தான் அதிலிருந்தார்கள். எனது பெட்ரோல் பல்க்கின் உரிமையாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 2**

| Name | திரு.அருண்குமார் | Occupation | எலக்ட்ரீசியன் |
|---|---|---|---|
| Father's name | முருகேசன் | Calling | |
| Village | சல்லிபட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of March 2026.

09.03.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சல்லிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். கடந்த 17.04.2025 அன்று ஏகேஆர் பேருந்து நிறுவனத்திற்கு சொந்தமான TN 65 Q 1762 என்ற பதிவெண் கொண்ட பேருந்து ஜோதி பெட்ரோல் பல்க்கிற்கு காலை 10.00 மணியளவில் வந்தது. அந்த பேருந்து எங்கள் பல்க்கின் பராமரிப்பில் இருந்து வந்தது. பின்னர் 23.04.2025 அன்று மாலை 06.00 மணியளவில் பேருந்து எலக்ட்ரீசியன் பராமரிப்பு வேலைக்காக நான் பேருந்தை பார்த்தபோது பேருந்தில் சாவிபோட்டும் லயன் எதுவும் வராததால் பேருந்து ஆன் ஆகவில்லை. பேருந்தின் பேட்டரியை பார்த்தபோது 150 ஆம்ஸ் எக்ஸைட் பேட்டரிகள் அதன் மதிப்பு ரூ.34000/- காணாமல்போனது தெரியவந்தது. நான் இது சம்மந்தமாக மேலாளரிடம் சொன்னேன். அவர் சிசிடிவியில் பார்த்தபோது 2 நபர்கள் பேட்டரியை இருசக்கர வாகனத்தில் திருடி சென்றது தெரியவந்தது. சிவப்பு நிற சட்டை அணிந்திருக்கும் ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்ட மற்றொரு எதிரி பேட்டரியை பிடித்துக்கொண்டு சென்றதை பார்த்தேன். மேலாளர் இது சம்மந்தமாக

எனது முதலாளிக்கு தகவல் தெரிவித்தார். அவரும் வந்து சிசிடிவி பதிவை பார்த்துவிட்டு அக்கம்பக்கத்தில் விசாரித்து பார்த்தோம். ஒரு வாரம் கழித்தும் பேட்டரி கிடைக்கவில்லை என்பதால் இது சம்மந்தமாக போலீசாரிடம் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அதனை 2ம் எதிரி தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது–**

நான் ஐடிஐ எலக்ட்ரீசியன் படித்துள்ளேன். நான் ஜோதி பெட்ரோல் பல்க்கில் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் ஏகே ஆர் டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பளம் ஜோதி பெட்ரோல் பல்க்கிலிருந்து தான் தருவார்கள் என்றால் சரிதான். நான் யாருக்காக வேலை செய்கிறேனோஅவர்கள் தான் எனக்கு சம்பவம் தருவார்கள் என்றால் சரிதான். நான் மேற்படி ஏகேஆர் டிரான்ஸ்போர்ட்டிற்கு சொந்தமான வாகனங்களை நான் பராமரிப்பு பணி மேற்கொள் வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எங்களது பல்க் உரிமையாளர் மேற்படி வாகனத்தை பராமரித்து வருவதால் நான் அதனை சரிபார்க்க சென்றேன். நான் எனது முதலாளி கேட்டுக்கொண்டதால் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளை பார்த்தபோது சிவப்பு சட்டை அணிந்த நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றதாகவும் மற்றொரு நபர் இருசக்கர வாகனத்தின் பின்னால் பேட்டரியுடன் அமர்ந்திருந்ததாகவும் கூறும் சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளின் பெயர் விலாசம் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் இவ்வக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.